# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

Crl.MP. No.378/2024

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 2 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | பரணி |
| Father's Name | : | சேதுபதி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 17.12.2024

**முதல் விசாரணை**

நான் கரூர் மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 5 ஆண்டுகளாக இளம் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2022 ம் ஆண்டு எனது உறவினரான என் ஊரைச் சேர்ந்த சந்திரசேகரன் மகன் பாலுமகேந்திரன் என்பவர் அவருடைய விபத்து சம்பந்தமான வழக்கில் என்னை நடத்தி தருமாறு என்னை கேட்டுக் கொண்டார். வேலாயுதம்பாளையம் கா.நி சிசி எண்.538/2022 குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2 ல் நடைபெற்றது. ஷை வழக்கில் நான் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால் என் நண்பரான

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

கரூர் வழக்கறிஞர் பிரதீப் என்பவரை அறிமுகப்படுத்தி வைத்தேன். ஷை வழக்கில் என் நண்பர் ஆஜராகி ஷை வழக்கை நடத்த ரூ.40 ஆயிரம் வழக்கறிஞர் ஊதியமாக கேட்டதன் பேரில் பாலுமகேந்திராவும், ஷை தொகை தர ஒப்புக் கொண்டார். ஷை வழக்கு முடிவதற்குள் பகுதி பகுதியாக தொகையாக கொடுப்பதாக ஒத்துக்கொண்டார். அதன்படி நாங்கள் ஷை வழக்கினை ஏற்று நடத்தி வந்தோம். ஷை வழக்கினை எங்கள் மூத்த வழக்கறிஞர் எஸ்.சம்பத் அவர்களை வைத்து நடத்தினோம். அப்போது நான் வழக்கறிஞர் கட்டணத்தை கேட்டதற்கு எனது நண்பர் பிரதீப் வழக்கறிஞரிடம் கொடுத்து விட்டதாகவும், பிரதீப் வழக்கறிஞரிடம் கேட்டதற்கு மூத்த வழக்கறிஞரிடம் வழக்கறிஞர் கட்டணத்தை கொடுத்து விட்டதாகவும் மூத்த வழக்கறிஞர் சம்பத் அவர்களை கேட்டதற்கு வழக்கறிஞர் கட்டணத்தை என்னிடம் கொடுத்து விட்டதாகவும் மாறிமாறி கூறியுள்ளார்.

ஆனால் வழக்கு முடியும்வரையில் யாதொரு கட்டணமும் யாரிடமும் கொடுக்காமல் வழக்கறிஞர் மூவரையும் ஏமாற்றியுள்ளார். 19.12.2023 ம் தேதி வழக்கு தீர்ப்பன்று 3 பேரும் ஒரே இடத்தில் கேட்கும்போது மூவரையும் பாலுமகேந்திரா ஏமாற்றியது தெரிய வந்தது. அப்போது பாலுமகேந்திரா ஒருவார காலத்தில் வழக்கறிஞர் கட்டணத்தை மூத்த வழக்கறிஞர் சம்பத் அவர்களுக்கு கொடுத்து விடுவதாக உறுதியளித்தார். ஆனால் அதன்பின்னரும் வழக்கு கட்டணத்தை கொடுக்காமல் காலம் தாழ்த்தி வந்தார். பலமுறை பாலுமகேந்திராவை போன் மூலம் அழைத்தும் போன் அழைப்பை எடுக்காமல் இருந்து வந்தார். பாலுமகேந்திரா என் ஊரை சேர்ந்தவர் என்பதால் 17.1.2024 ம் தேதி எதிரியின் வீட்டிற்கு சென்று கேட்டதற்கு 1 ம் எதிரியின் தந்தையும் வருகின்ற வெள்ளிக் கிழமைக்குள் கொடுத்து விடுவதாக எங்களை நம்ப வைத்து அனுப்பினார்கள்.

அதன் பின்னிட்டு மூத்த வழக்கறிஞர் சம்பத் அவர்களுக்கு எஸ்எம்எஸ் மூலமாக Sir Please friday I will send your fees sir என்று அனுப்பியுள்ளார். அதன் பின்னிட்டும் இருவரும் சேர்ந்து வழக்கறிஞர் தொகையை கொடுக்காமல் ஏமாற்றி வந்துள்ளனர். அதன் பின்னிட்டு நான் எங்கள் மூவரையும் இரு எதிரிகளும் சேர்ந்து நம்ப வைத்து ஏமாற்றியதை புரிந்து கொண்டோம். ஆகையால் 27.2.2024 ம் தேதி வழக்கறிஞர் கட்டணத்தை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம். 1.3.2024 ம் தேதி 1 ம் எதிரி

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

பாலுமகேந்திரா ஷை வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டார். 2 ம் எதிரி 29.2.2024 ம் தேதி ஷை வழக்கறிஞர் அறிவிப்பை திருப்பி அனுப்பி விட்டார். எதிரிகள் இருவரும் ஷை எங்கள் வழக்கறிஞர் கட்டணத்தை தராமல் எங்களை நம்ப வைத்து ஏமாற்றியதற்கு இதச பிரிவு 406, 420 ன் கீழ் தண்டனையும் அபராதமும் விதித்து தீர்ப்பாகும்படி கேட்டுக் கொள்கிறேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

Crl.MP. No.378/2024

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 3 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | சம்பத் |
| Father's Name | : | சந்தானம் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 17.12.2024

**முதல் விசாரணை**

நான் கரூர் மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 17 ஆண்டுகளாக வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2022 ம் ஆண்டு இளம் வழக்கறிஞர் பரணி என்பவர் உறவினரான சந்திரசேகரன் மகன் பாலுமகேந்திரன் என்பவர் அவருடைய விபத்து சம்பந்தமான வழக்கில் வழக்கை நடத்தி தருமாறு வழக்கறிஞர் பரணியை கேட்டுக் கொண்டார். வேலாயுதம்பாளையம் கா.நி சிசி எண்.538/2022 குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2 ல் நடைபெற்றது. ஷை பரணி உரிமையியல் நீதிமன்றத்தில் அதிகமாக

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

வழக்கு உள்ளதால் இளம் வழக்கறிஞர் பிரதீப் என்பவரை பாலுமகேந்திராவின் விபத்து வழக்கை நடத்திக் கொடுக்கும்படி பாலுமகேந்திராவை வழக்கறிஞர் பிரதீப்பிடம் அறிமுகம் செய்து வைத்தார். வழக்கறிஞர் பிரதீப் வழக்காவணங்களை பார்வையிட்ட பின்பு வழக்கறிஞர் கட்டணம் ரூ.40 ஆயிரம் ஆகும் என்று தெரிவித்தார். மேற்படி வழக்கறிஞர் கட்டணத்தை ஏற்று பாலுமகேந்திரா வழக்கறிஞர் பிரதீப்புக்கு வக்காலத்தில் கையெழுத்து செய்து கொடுத்தார். மேலும் வழக்கறிஞர் கட்டணத்தை வழக்கு நடைபெறும் காலக்கட்டத்தில் பகுதிபகுதியாக கொடுத்து விடுவதாகவும் உறுதியளித்தார். அதனை நம்பி வழக்கறிஞர் பிரதீப் மற்றும் நானும் சேர்ந்து ஷை விபத்து வழக்கை நடத்தினோம். வழக்கு நடைபெறும்போது வழக்கறிஞர் கட்டணம் குறித்து வழக்கறிஞர் பரணி பாலுமகேந்திராவிடம் கேட்டபோது பாலுமகேந்திரா வழக்கறிஞர் கட்டணத்தை பிரதீப்பிடம் கொடுத்து விடுவதாக கூறினார்.

பிரதீப் வழக்கறிஞர் கட்டணத்தை கேட்டபோது என்னிடம் கொடுத்து விடுவதாக கூறினார். நான் வழக்கறிஞர் கட்டணம் பற்றி கேட்டபோது பிரதீப்பிடம் கொடுத்து விடுவதாக கூறினார். இந்நிலையில் 19.12.2023 ம் தேதி வழக்கு பாலுமகேந்திராவுக்கு சாதகமாக முடிவுற்றது. அதன்பின்னர் வழக்கறிஞர் கட்டணம் குறித்து பாலுமகேந்திராவிடம் கேட்டபோது எங்கள் யாரிடமும் தொகை எதுவும் கொடுக்காமல் எங்கள் மூவரையும் தனித்தனியே நம்ப வைத்து ஏமாற்றி வந்த விபரம் தெரிய வந்தது. அதன்பின்பு பாலுமகேந்திராவிடம் கேட்டபோது பாலுமகேந்திரா ஒருவாரத்தில் வழக்கறிஞர் கட்டணத்தை என்னிடம் கொடுத்து விடுவதாக கூறிச் சென்றார். அதன்பின்னிட்டு பாலுமகேந்திரா அவர் கூறியதுபோல் வழக்கறிஞர் கட்டணத்தை கொடுக்கவில்லை. வழக்கறிஞர் பிரதீப் வழக்கறிஞர் கட்டணம் குறித்து பாலுமகேந்திராவிடம் பலமுறை கேட்டபோது செல்போனை எடுத்து பதில் அளிக்காமல் தவிர்த்து வந்தார். ஆகையால் 17.1.2024 ம் தேதி வழக்கறிஞர் பரணியின் உறவினரான பாலுமகேந்திரா வீட்டில் சென்று கேட்டபோது பாலுமகேந்திராவும் அவர் தந்தையும் வரும் வெள்ளிக்கிழமை அன்று தந்து விடுவதாக இருவரும் நம்பும்படி கூறி வழக்கறிஞர் சம்பத் அவர்களுக்கு எஸ்எம்எஸ் மூலம் குறுந்தகவலை அனுப்பி வைத்தார். அதன்பின்னிட்டும் அவர் உறுதியளித்ததுபோல் வழக்கறிஞர் கட்டணம் கொடுக்கவில்லை.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

ஆகையால் நம்ப வைத்து மோசடி செய்தும் வழக்கறிஞர் கட்டணம் கேட்டும் 27.2.2024 ம் தேதி வழக்கறிஞர் பிரதீப் அறிவிப்பு அனுப்பினார். அந்த அறிவிப்பினை பாலுமகேந்திரா 1.3.2024 ம் தேதி பெற்றுக் கொண்டார். பாலுமகேந்திராவின் தந்தை சந்திரசேகர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் 29.2.2024 ம் தேதி திருப்பி அனுப்பி வைத்தார். பாலுமகேந்திராவும் அவர் தந்தை சந்திரசேகரும் வழக்கறிஞர் கட்டணம் தருவதாக எங்களை நம்ப வைத்து ஏமாற்றியுள்ளனர். எதிரிகள் இருவரும் ஷை எங்கள் வழக்கறிஞர் கட்டணத்தை தராமல் எங்களை நம்ப வைத்து ஏமாற்றியதற்கு இதச பிரிவு 406, 420 ன் கீழ் தண்டனையும் அபராதமும் விதித்து தீர்ப்பாகும்படி கேட்டுக் கொள்கிறேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்